**சுயமான மற்றும் பூரணமான சம்மதமின்றி வற்புறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு அல்லது ஏமாற்றப்பட்டு ஒருவர் திருமணம் செய்யப்படுவது கட்டாயத் திருமணம் எனப்படும்.**

**வயது, பாலினம், பாலியல் நாட்டம் அல்லது கலாசாரப் பின்னணி என்ற வேறுபாடின்றி எவரும் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகலாம்.**

கட்டாயத் திருமணம் என்ற குற்றமானது கலாசார, சமய அல்லது ஆஸ்திரேலியாவில் நிகழும் சட்டபூர்வ திருமணங்கள் (திருமணம் செய்து வைப்பதற்காக ஒருவர் ஆஸ்திரேலியாவிற்குள் கொண்டு வரப்படுவது உட்பட) மற்றும் திருமணம் செய்து வைப்பதற்காக ஒருவர் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிநாட்டிற்குக் கொண்டு செல்லப்படுவது ஆகிய காரியங்களுக்கும் பொருந்தும்.

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் கட்டாயத் திருமணத்திற்து ஆளாகி அல்லது ஆளாகும் ஆபத்தில் இருந்தால், அதற்கான உதவி கிடைக்கும்.

உடனடி ஆபத்து இருந்தால் அழைக்க வேண்டியது **மூன்று சைபர்கள் (000)**.

இல்லாவிடில், கட்டாயத் திருமணத்துக்கு ஆளாகி அல்லது ஆளாகும் ஆபத்தில் இருப்பவர்களுக்கு 'ஆஸ்திரேலிய பெடரல் காவல்துறை' (Australian Federal Police - AFP) யினர் முதல்கட்ட ஆலோசனையை வழங்க முடியும் நீங்கள் விரும்பினால் AFP உடனான உங்கள் தொடர்பு அனாமதேயமாக இருக்க இயலும்.

நீங்கள் 131 AFP (131 237) இல் அழைக்க முடியும் அல்லது பின்வரும் வலைத்தளத்திலுள்ள ஒன்லைன் படிவத்தைப் பூரணப்படுத்தவும் **www.afp.gov.au**.

இரகசியமான ஆலோசனை பெற நீங்கள் Anti-Slavery Australia (அவுஸ்திரேலிய அடிமைத்துவ ஒழிப்பு) எனும் அமைப்பினை 02 9514 9662 இல் தொடர்பு கொள்ளவும் அல்லது **antislavery@uts.edu.au.**

end exploitation

கட்டாயத் திருமணம்

ஆஸ்திரேலியாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் தாம் திருமணம் முடிப்பதா, மற்றும் எவரை எப்போது தாம் முடிப்பது என்று தீர்மானிக்கும் சுதந்திரம் உண்டு. ஒருவரைக் கட்டாயத் திருமணத்திற்கு உட்படுத்துவது ஆஸ்திரேலிய சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும் மற்றும் அது மனித உரிமை மீறலுமாகும்.

# கட்டாயத் திருமணம்

**An Australian Government Initiative**

கட்டாயத் திருமணம் பற்றியும் உங்களையும் பிறரையும் அவர்கள் உதவிகோரும்போது எவ்வாறு காப்பது என்றும் அறியச் செல்ல வேண்டிய வலைத்தளம் www.ag.gov.au/forcedmarriage.

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவையை நீங்கள் 131 450 இல் தொடர்பு கொள்ளலாம்.

Tamil

